ஆழ்வார்களின் திவ்யதேசாநுபவம்

ஸ்ரீ உ. வே. திருநாங்கூர் P. B. K. ஸ்ரீநிவாஸாசாரியார்
(ஸ்ரீராமானுஜ மிஷன் பொதுச்செயலாளர்)

பகவத் குணநுபவத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து நிற்பவர்கள் ஆழ்வார்கள் எனப் படுவர். அவ்வநுபவத்தால் உண்டான ஆநந்தம் மிகுதியாக அதன் போக்குவீடாக பகவத் ப்ரேரணையால் அவர்கள் நினைவின்றியே இலக்கணம் பொருந்திய பாசுரங்களாக வெளிப்பட்டது. அப் பாசுரங்கள் திவ்யப்பிரபந்தம் என வழங் கப்படுகின்றன. ஆழ்வார்கள் திவ்ய ஸூரி கள் எனப்படுகின்றனர். அவர்களுள் சிலர் இருந்த இடத்திலிருந்தே யோக ஸாக்ஷாத்காரத்தால்—ஞானக் கண்ணல் அந்தந்த ஸ்தலங்களையும், அவற்றின் சிறப்புக்களையும் கண்டனுபவித்துப் பாசு ரங்களை வெளிப்படுத்தினர். நம்மாழ்வார் அத்தகையர். சிலர் அந்தந்த ஸ்தலங்கள் தோறும் நேரில் சென்று அவற்றின் சிறப் புக்களை நேரில்கண்டு அனுபவித்துப் பாசு ரங்களை வெளிப்படுத்தினர். திருமங்கை யாழ்வார் அத்தகையர். வடக்கே இமயத் தில் திருப்பிரிதி தொடங்கித் தெற்கே மஹேந்திர மலைச்சாரலில் திருக்குறுங்குடி வரை எண்பதுக்கும் மேற்பட்ட ஸ்தலங் களை நேரில் கண்டு அனுபவித்தார். அந்த ஸ்தலங்கள் எல்லாம் திவ்ய தேசங்கள் என வழங்கப்படுகின்றன. ஆகவே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு திவ்ய ஸூரிகள், திவ்யப் பரபந்தம், திவ்ய தேசம் என்ற மூன்றும் திவ்யம் முக்கியமானவை.

ஆழ்வார்களில் கடைசியான திரு மங்கையாழ்வார் தாம் நேரில் கண்ட அந்தந்த் திவ்ய தேசங்களில் முந்திய ஆழ் வார்கள் பாடியருளிய திவ்யப் பிரபந்தங் களை, முக்கியமாக நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியை, பகவத் கைங்கர்யம் புரிபவர்கள் கைங்கர்ய காலங்களில் அநு ஸந்தானம் செய்து வருவதைக் கண்டு அதை ஆங்காங்கே வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காட்டியுள்ளார். காஞ்சியில் அட்டபுயகர திவ்ய தேசப்பதிகத்தில் 'செந் தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவர் இவர் கொல்' (பெரிய திருமொழி 2-8-2) என்று அருளியிருப்பதைக் காணலாம். அதேபோல் திருக்கோவலூரில் "ஆங்கரும் பிக் கண்ணீர் சோர்ந்தன்புகூரும் அடியவர் கட்காரமுத மானன் தன்னை" (பெ. தி. 2.10.4) என்றும், திருநறையூரில் "செம் மொழிவாய் நால்வேத வாணர் வாழும் திருநறையூர், மணிமாடச் செங்கண் மாலை" (பெ. தி. 6. 6.10) என்றும், தேரழுந் தூரில் "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் திசைமுகனை யனையவர்கள் செம்மைமிக்க அந்தணர்தமாகுதியின் புகையார் செல்வத் தணியழுந்தூர் நின் றுகந்த அமரர்கோவே" (பெ. தி. 7.8.7) என்றும், சிறுபுலியூரில் குறிப்பாக "கிளி மடவார் செவ்வாய் மொழி பயிலும் சிறு புலியூர்" (பெ.தி. 7.9.3) என்றும், "கோவை யின் தமிழ் பாடுவார் குடமாடுவார்........ ஆறங்கம் வல்லவர் தொழும் தேவ தேவ பிரான் கோட்டி யூரானே" (பெ.தி.9.10.9.) என்றும் திவ்ய தேசங்களில்தான் கண் டநுபவித்த செந்தமிழ் திவ்ய ப்ரபந்தாநு ஸந்தானத்தை வெளிப்படுத்தியுள்ளார். பெரியாழ்வாரும் திருக்கோட்டியூர் பதிகத் தில், "குருந்தமொன் றொசித்தா னொடும் சென்று கூடியாடி விழாச்செய்து திருந்து நான்மறையோர் இராப்பகல் ஏத்திவாழ்

திருக்கோட்டியூர்" (பெரியாழ் திரு. 4.4.7) என்று திருந்து நான்மறை என்று நம்மாழ் வாரின் நால்வேத ஸாரமான நாலு திவ் யப் பிரபந்தங்களைக் குறிப்பாக உணர்த்தி யுள்ளார். குலசேகரப் பெருமாளும், திரு வரங்கப் பகுதியில், "அமரர்கள் தம் தலை வனை அந்தமிழின்பப் பாவினை அவ் வட மொழியைப் பற்றற்றார்கள் பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும் கோவினை" (பெருமாள் திரு. 1-2) என்று பற்றற்ற நான்மறையோரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் உபய வேதத்தையும் திருவரங்கத்தில் பயில்கின்றனர் என்பதைக் குறிப்பிட்டுள் ளார். உபய வேதம் என்பது வடமொழி நூல் வேதமும் நம்மாழ்வார் அருளிய செந்தமிழ் நால்வேதமும் மற்ற ஆழ்வார் கள் திவ்யப்ரபந்தமும் ஆகும். பகவத் ஆராதன காலத்தில் அலங்காராஸனத் தில் செவிக்கின்பம்தரும் இனிய ஸ்தோத் ரங்களால் எம்பெருமானை இன்புறச்செய்ய வேண்டும் என்பது பாஞ்சராத்ரம் முத லான ஆகமங்களில் கூறப்பட்டது. வேத விண்ணப்பத்தோடு ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்களையும் வேதார்த்த விவரண மாய் வேத துல்யமாய் வேதியர்கள் ஏற்று அநுசந்தித்தனர், இது பகவானுக்கு அபி மதமாய் அமைந்தது. மற்ற மதங்களில் தமிழ் ப்ரபந்தங்களுக்கு இந்தச் சிறப்பு ஏற்படவில்லை. வேதார்த்த விவரணமல் லாததோடு வேதவிருத்தார்த்தத்தைக்கூறு முகத்தால் வேதியர் அதைக் கைக்கொள்ள வில்லை. ஆகவே விஷ்ணு கோவில்களில் தான் "வேதபாராயணகாரர்கள், திவ்யப்ர பந்த அத்யாபகர்கள்" என்று கைங்கர்யம் புரிபவர்கள் உண்டாயினர். அவர்கள் வேத மோதும் அந்தணர்களாகவே அமைந் தனர். பகவதாராதன அங்கமாய் அதில் அடங்கினதாய் அதைச் செய்யத் தகுதி யுடையவர்களான அந்தணர்களே திவ்ய ப்ரபந்தத்தையும் கோவில்களில் அநுஸந் திப்பது யுக்தம் என்ற அனைவரும் அதை ஏற்றுக்கொண்டனர்.

திருமங்கையாழ்வார் மேலும் அந்தந் தத் திவ்ய தேசங்களை அநுபவிக்கும் போது அங்குத் தமக்கு முன்பு அநுபவித்த ஆழ் வார்களின் பாசுரங்களையும், சரித்திரங் களையும் தெரிந்து கருத்தில் கொண்டு தம் பாசுரங்களில் அவற்றைக் குறிப்பிட்டுள் ளார். திருவல்லிக்கேணிப் பதிகத்தில் "வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை" என்னும் இரண்டாம் பாசுரத்தில் "ஒப்ப வரில்லா மாதர்கள் வாழும் மாடமா மயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே". என்று பெண்களைப்பிரதானமாக வருணித் திருப்பது முந்திய ஆழ்வாரான பேயாழ் வார் "எந்தை ஒருவல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்பன் திருவல்லிக்கேணி யான்" என்று பிராட்டி பிராதான்யமான ஊர் திருவல்லிக்கேணி என்று அநுஸந் தித்திருப்பதைக் கருத்தில் கொண்டே. இதை இங்கு "ஒப்பவரில்லா.......... பிராட்டி பரிகரமேயாயிற்று. "நாகயோர் ஸித்யதே பரம்" என்று அவள் விபூதியும் ஈச்வர விபூதியுமாய் இரண்டு கூறுயிற்ற இருப்பது. மயிலாப்பூர் என்று படை வீட்டுக்குப் பேர்" என்ற பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம் விளக்குகிறது.

திருவல்லிக்கேணியில் ஸ்ரீ பேயாழ் வாரால் திருத்திப் பணி கொள்ளப்பட்ட திருமழிசைப்பிரான் இங்குப் பார்த்தசார திக்கு முன்பே வந்து உலகமளந்த சிரமம் தீர, கடற்கரையில் குளிர்ந்த காற்று வீச ஐந்தலை வாய் நாகத்தணையில் சயனித்துக் கொண்டிருக்கும் வேதவல்லி நாயகனை மன்னாதன் எம்பெருமானை அநுசந்தித் தார், "தானால் உலகமளந்த அசைவே கொல்" என்று. அதைக் கருத்தில் கொண்டு திருமங்கையாழ்வார் இரண் டாம் பாசுரத்தில் "வேதத்தை.......... என்னையாளுடையப்பனை" என்று அநுஸந் தித்தார். முதல் பாசுரத்தில் முன்னும் பின்னும் க்ருஷ்ணவதார சரிதமே அநு

பவிக்கப்படுகிறபடியால் ''புரமெரி செய்த சிவனுறு துயர்களை தேவை'' என்பதுவும் க்ருஷ்ணவதார சரிதாமாகவே அநுபவிக்கலாம். வ்யாக்யானத்தில் பிதாவான பிரமனின் தலையையறுத்துப் பாதகியான ருத்ரனின் கையில் ஒட்டிக்கொண்ட அம் மண்டையோட்டில் இரந்துண்ணும் எளிவரவைத் தண் திருமார்பில் வாச நீரை அதில் அக்ஷயம் என்று வார்த்து அம் மண்டையோடு அவன் கையில் நின்றும் விழுந்து போகச்செய்து நீக்கின வ்ருத்தாந்தம் குறிக்கப்பட்டுள்ளது. க்ருஷ்ணவதாரத்தில் பாணாஸுர யுத்தத்தின் போது தன் அடியானை பாணனுக்கு உதவியாகப் பரிவாரத்துடன் வந்த ருத்ரன் பயந்து ஓடும்படியைக் கண்டு கண்ணன் இரக்கத்தோடு பாணனைக் காத்து ருத்ரனின் எளிவரவைப் போக்கினான். இந்தச் சரித்திரத்தைப் பேயாழ்வார் திருமழிசைப்பிரானுக்குக் குறிப்பிட்டு அவரைத் திருத்தினார். பேயாழ்வார் பாணாஸுர யுத்த சரிதத்தை ''மகனொருவர்க் கல்லாத மாமேனி மாயன் ....வாணன் தோள் செற்[...] நிறைசெய்து என் நெஞ்[...] என்று அநுஸந்தித்தார். அ[...] ரெடுத்த உந்தியான் ஆ[...] னை--எம்பெருமான், மாமல[...] சடையான் என்றிவர்கட்கு[...] தானுமோ ? இமை'' சிறி[...] பார் என்று 97-வது பாசுரத்[...] னார். இதைக் கைக்கொண்ட தி[...] பிரான் தமது திருச்சந்தவிருத்[...] தத்தில் ''குந்தமோடு சூலம் வே[...] ....அந்த வந்த ஆகுலம் அமர[...] வரே''; வண்டுலாவு கோதை ம[...] வாணனுக்கு இரங்கினான் எ[...] (70, 71வது பாசுரம்) என்று[...] தார். ஆகவே ''சிவனுறு [...] தேவை'' என்று திருமங்கை[...] பாணாஸுர யுத்தத்தின்போது [...] ஏற்பட்ட தோல்வியாலான [...] போக்கினதைக் குறிப்பிட்டார்[...] லாம். விரிவிற்கஞ்சி இவ்[...] அமைகிறேன்.